


# 21.05.2026 செய்திகள்

## மொழிக் கொள்கையும் கல்விக் கொள்கையும் இருமொழிக் கொள்கை ஏன் முக்கியமாகிறது?

» இந்தி, சம்ஸ்கிருதம், ஆங்கிலம்

- அயர்லாந்து நாட்டில், அதன் பண்டைய மொழியான 'ஐரிஷ்' தேசிய மொழியாகவும், ஆங்கிலம் அதிகாரபூர்வ மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுபோல, இந்தியாவின் தேசிய மொழியாக சமஸ்கிருதத்தை அறிவிக்க வேண்டும் என்று அரசமைப்பு அவையில் சிலர் வாதிட்டனர்.
- இறுதியில் இந்தியாவின் அதிகாரபூர்வ மொழியாக தேவநாகரி வரிவடிவிலான 'இந்தி ' ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இந்தி தேசிய மொழியாக அல்லாமல் நிர்வாகப் பயன்பாட்டுக்கான அலுவல் மொழியாக மட்டுமே அறிவிக்கப்பட்டது.
- சமஸ்கிருதத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில் அதை எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக இடம்பெற வைத்தனர்.
- ஆங்கிலத்தைப் பொறுத்தவரை, சட்டக்கூறு 343 இன்படி இந்தியோடு இணை அலுவல் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதேவேளை ஆங்கிலத்தின் பயன்பாடு கால அவகாசம் 15 ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்டது.
- அரசமைப்புச் சட்டத்தின் அதே பகுதி 17இல் உள்ள சட்டக்கூறு 348இன்படி உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள், சட்ட வரைவுகளுக்கான மொழியாக ஆங்கிலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் பயன்பாடு குறித்து வரையறுக்கப்படாத கால அவகாசம் அளிக்கப்பட்டது.
- சட்டக்கூறு 343இன்படி, இந்தியா குடியரசு நாடான பிறகு 15 ஆண்டுகளுக்கு மட்டுமே, அதாவது 1965 வரை, ஆங்கிலம் மத்திய அரசின் இணை அலுவல் மொழியாக நீடிக்கலாம் என்பதன் நோக்கமே 15 ஆண்டுகளுக்குள் இந்தியைக் கற்றுக்கொண்டு ஆங்கிலத்தை முழுமையாக அகற்ற வேண்டும் என்பதுதான்.

» அரசமைப்புரீதியான கட்டாயம்

- அதேநேரம் ஒரு பாதுகாப்பு அம்சமும் அதில் இடம்பெற்றது. அதாவது, 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஆங்கிலம் தேவைப்பட்டால் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நீட்டித்துக்கொள்ளலாம் என்பதே அது.
- இந்த வழிகாட்டுதலைத் தொடர்ந்துதான் 1963 அலுவல் மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டு ஆங்கிலம் நீடிக்க வழிவகை செய்யப்பட்டது.

## உலகின் மிக வெப்பமான நகரம் உத்தர பிரதேசத்தின் பாண்டா

- உத்தரபிரதேச மாநிலம் புந்தேல்கண்ட் பிராந்தியத்தில் உள்ள பாண்டா மாவட்டம் கடந்த திங்கட்கிழமை அன்று இந்தியாவின் மிக வெப்பமான பகுதியாக உருவெடுத்தது.
- அங்கு பகல் நேர வெப்பநிலை 47.6 டிகிரி செல்சியஸாக பதிவாகி, உலகின் மிக உயர்ந்த வெப்பநிலையை எட்டியுள்ளது.
- கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த மாவட்டத்தில் மே மாதத்தில் மிக அதிக வெப்பநிலை பதிவாகி உள்ளது.
- பாண்டா மாவட்டத்தின் வரலாற்றிலேயே மிக உயர்ந்த வெப்பநிலையாக ஜூன் 10, 2019 அன்று பதிவான 49.2 டிகிரி செல்சியஸ் மட்டுமே நீடிக்கிறது. ஆனால், இப்போது ஏற்பட்டுள்ள புதிய மாற்றம் என்னவென்றால், இந்த நகரம் அடிக்கடி 47 மற்றும் 48 டிகிரி செல்சியஸைத் தொட்டுக் கொண்டிருக்கிறது.
- வறண்ட பாறைகள் நிறைந்த நிலப்பரப்பு, மறைந்து வரும் பசுமைப் போர்வை, இடைவிடாத மணல் கொள்ளை மற்றும் வற்றிப்போகும் ஆறுகள் ஆகியவற்றால், பாண்டா மாவட்டம் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு வெப்பத் தீவாக மாறி வருகிறது.

- இந்தச் சட்டம் உருவாக, சட்டக்கூறு 348 உதவியாக இருந்தது என்பதும் உண்மை. இந்தி பேசாத மக்களுக்கு இது பாதுகாப்பாகவும் அமைந்தது.
- சட்டக் கூறு 348க்கு நாடாளுமன்றம் ஒரு மாற்றுச் சட்டம் இயற்றாதவரை கல்வி / மொழிக் கொள்கையில் ஆங்கிலம் நீடிப்பது ஓர் அரசமைப்புரீதியான கட்டாயம் (Constitutional Necessity) ஆகும்.
- மொழிப் பிரச்சினை குறித்து முரண்பட்ட வாதங்கள் தொடர்ந்த நிலையில்தான், அரசியல் நிர்ணய அவை பல சிக்கலான பிரச்சினைகளுக்குத் தெளிவான முடிவுகளை எடுக்காமல் 'நாடாளுமன்றம் தீர்மானிக்கும்' என்று காலத்தின் கையில் ஒப்படைத்துவிட்டது.
- அரசமைப்புச் சட்டத்தில் பல இடங்களில், 'நாடாளுமன்றம் சட்டம் இயற்றும் வரை (Parliament may by law provide)' என்ற சொற்றொடர் வருங்காலத் தலைமுறையினர் தங்களது தேவைக்கேற்பத் தீர்மானித்துக்கொள்ளட்டும் என்று இறையாண்மையை வருங்காலத்திடம் ஒப்படைத்துவிட்டனர். அரசியல் நிர்ணய அவை உறுப்பினர்கள் அன்று எடுத்த அந்த 'நெகிழ்வுத்தன்மை' கொண்ட முடிவுதான் பன்முகத்தன்மை கொண்ட இந்தியா ஒற்றுமையாக இருப்பதற்கு மூலக் காரணம்.

» கோத்தாரி ஆணையம்

- 1965இல் இந்தி மட்டுமே அதிகாரபூர்வ அலுவல் மொழியாக மாறவிருந்த சூழலில், கொழுந்துவிட்டு எரிந்த அரசியல் நெருக்கடியைத் தணிக்கவே கோத்தாரி ஆணையம் (1964-66) மும்மொழிக் கொள்கையை ஒரு சமரசத் தீர்வாக முன்வைத்தது.
- கோத்தாரி ஆணையம்கூட 'இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படும்' என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை. 'தேச ஒருமைப்பாட்டுக்கு ஒரு மொழி தேவை. அது இந்தியாக இருக்கும். அதை மும்மொழித் திட்டத்தின் வாயிலாகக் கொண்டுவருகிறோம்' என்கிற வாதத்தை முன்வைத்தது.
- ஆனால், இந்தக் கொள்கை ஒரு சமமற்ற சுமை (Unequal Burden) என்று இந்தி பேசாத மக்கள் இந்த முடிவை முற்றிலும் பயனற்ற நடைமுறையாகக் (Illogical Practice) கருதினர்.
- 1956ஆம் ஆண்டே மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டு, அரசமைப்புச் சட்டக்கூறு 345இன்படி அந்தந்த மாநில மொழியே அந்தந்த மாநிலத்தின் ஆட்சி மொழி என்று ஆன பிறகு சட்டக்கூறுகள் 343, 348, 1963 அலுவல் மொழிச் சட்டம் (திருத்தச் சட்டம் 1967) ஆகியவை நிர்வாகம் / தொடர்புமொழியை ஏற்கெனவே தீர்மானித்திருந்தன.
- கோத்தாரி ஆணையத்தின் மும்மொழிக் கொள்கை, 2020 கல்விக் கொள்கையில் பிரதிபலித்தாலும், அதன் பரிந்துரைகளுக்குப் பிறகு எவ்வளவோ மாற்றங்கள் நடந்தேறிவிட்டன.
- தேசியக் கல்விக் கொள்கை தாய்மொழிக் கல்விக்கு முன்னுரிமை அளித்தாலும் தொடர்பு மொழியாக (Link Language) இந்தியையும் அயல் மொழி ஒன்றையும் கற்கப் பரிந்துரைக்கிறது.
- 1963 அலுவல் மொழிச் சட்டத்துக்கு (திருத்தச் சட்டம் 1967) வகுக்கப்பட்ட 1976ஆம் ஆண்டு விதிகள் (2011 வரையிலான திருத்தம்) மாநிலங்களுக்கு இடையேயான தொடர்பு மொழி குறித்துத் தெளிவுபடுத்தியிருக்கின்றன. அச்சட்ட விதிகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.
- நாடாளுமன்றத்தில் பிரதமர் ஜவாஹர்லால் நேரு அளித்த, 'இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் தொடரும்' என்கிற உறுதிமொழி அலுவல் மொழிச் சட்டத் திருத்தத்தின் (1967) மூலம் சட்ட அங்கீகாரம் பெற்றுவிட்டது.
- இதனால் தொடர்புமொழிக் கொள்கைக்குத் தீர்வு ஏற்பட்ட நிலையில் கல்விக் கொள்கையில் மொழிக் கொள்கையின் தலையீடு தேவையற்றது என்பது ஒருவாதம்.
- அறிவார்ந்த அரசமைப்பு அவை வல்லுநர்களே 'கல்வி' மாநிலப் பட்டியலில் இருப்பதுதான் சரியானது என்று கருதி, கல்வியை மாநிலப் பட்டியலிலேயே இடம்பெற வைத்தனர். இருந்தாலும் 1976இல் நெருக்கடி நிலையின்போது கல்வி பொதுப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்டது.

SURESH' IAS ACADEMY

- கல்வி மாநிலப் பட்டியலில் இருந்தபோதே அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் மத்திய அரசின் மும்மொழிக் கொள்கையை நிராகரித்து இருமொழிக் கொள்கை (தமிழ் – ஆங்கிலம்) சட்டபூர்வமாக நிலைநாட்டப்பட்டது.
- மாநிலத்துக்கு என்று ஒரு கொள்கை வகுக்கப்பட்ட பிறகு, தேசியக் கொள்கை என்கிற உருவில் மாறுபட்ட ஒரு கொள்கையைத் திணிப்பது கூடாது. வேண்டுமானால் தேசியக் கொள்கை மாநிலங்களுக்கு வழங்கும் ஆலோசனையாக இருக்கலாம்.

» ஜனநாயகத்தைக் காக்க...

- மத்திய ஆட்சிப் பொறுப்பில் தேசியக் கட்சிகளில் எந்தக் கட்சி இருந்தாலும், எப்போதும் கல்வியைப் பயன்படுத்தி ஒரு தேசிய அடையாளத்தை உருவாக்க முயல்வதே அவர்களது நோக்கம்.
- கல்வியைப் பொறுத்தவரை மத்திய அரசின் ஆலோசனை ஒரு தார்மிக வழிகாட்டியாக இருந்த நிலை மாறி, 1976க்குப் பிறகு அது ஒரு நிர்வாகக் கட்டளையாக மாறத் தொடங்கியது.
- மாநிலங்களின் தன்னாட்சி அதிகாரத்தில் (State Autonomy) மறைமுகமாகத் தலையிடும் செயலாகவே இதைக் கருத வேண்டியுள்ளது.
- மத்திய அரசின் கல்வி மொழிக் கொள்கையானது, தர்க்கரீதியாகவும் சட்டரீதியாகவும் சமரச முயற்சியாகத் தொடங்கி, மாநில அதிகாரத்தைப் பறிப்பதாக மாறிய வரலாறாகத்தான் பார்க்க முடிகிறது.
- கல்வி மீண்டும் மாநிலப் பட்டியலுக்குத் திரும்பினால், அந்தந்த மாநிலங்களின் தேவைக்கேற்பக் கல்வி முறையைச் சிறப்பாக வடிவமைக்க முடியும்.

## 13 நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சி மேகாலயத்தில் தொடக்கம்

- மேகாலயத்தின் ரிபோய் மாவட்டத்தில் உள்ள உம்ரோய் ராணுவ நிலையத்தில் 'பிரகதி 2026' என்ற பெயரிலான கூட்டு ராணுவப் பயிற்சி தொடங்கியுள்ளது.
- இந்தியா, பூடான், கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மாலத்தீவு, மியான்மர், நேபாளம், பிலிப்பின்ஸ், ஷெசல்ஸ், இலங்கை, வியத்நாம் ஆகிய 13 நாடுகள் இந்தப் பயிற்சியில் ஈடுபடுகின்றன.
- பகுதியளவு மலைப்பாங்கான மற்றும் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, 2 வார காலம் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட உள்ளது.
- கூட்டுப் பயிற்சி மற்றும் கலாசார பரிமாற்றம் மூலம் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது இந்தப் பயிற்சியின் நோக்கம்.
- இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் வளர்ச்சி மற்றும் மாற்றத்துக்கான பிராந்திய ராணுவங்களின் கூட்டுறவுதான் சுருக்கமாக பிரகதி என்றழைக்கப்படுகிறது. சமத்துவம், நட்புறவு, பரஸ்பர மரியாதை உணர்வுடன் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.
- தொழில்முறை சார்ந்த கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடவும், பரஸ்பர அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ளவும், நெருக்கமான ராணுவ உறவுகளை ஏற்படுத்தவும் இந்தப் பயிற்சி வழியமைக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசு குழுக்கள், சட்ட பதவிகளில் பெண் வழக்குரைஞர்களுக்கு 30% இடஒதுக்கீடு

- இதுவரை எந்தவொரு பெண் வழக்குரைஞரும் இந்திய அட்டர்னி ஜெனரலாகவோ, சொலிசிட்டர் ஜெனரலாகவோ நியமிக்கப்படவில்லை.
- இதேபோல பல்வேறு உயர்நீதிமன்றங்களில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக ஆஜராவோரில் பெண்கள் யாரும் இல்லை.
- எனவே உச்சநீதிமன்ற குழுக்கள் முதல் உள்ளூர் சட்ட உதவி குழுக்கள் வரை, அனைத்து அரசு குழுக்கள் மற்றும் சட்டப் பதவிகளில் பெண் வழக்குரைஞர்களுக்கு குறைந்தபட்சம் 30 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க மத்திய, மாநில அரசுகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு உத்தர விட வேண்டும்' என்று கோரப்பட்டது.